தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 கும்பம் (20-3-1987) 85 காசுகள் (இதழ் எண்: 83)

தொடர்வண்டி கவிழ்ந்தது தீய தேவதைகளின் வேலையென்றால் வன்முறை-என ஏன் கூற வேண்டும்?

தீய தேவதைகள் பாலத்தில் இல்லை; பாராளுமன்றத்திலேயே உள்ளன!



1956-ஆம் ஆண்டு, அரியலூருக்கு அருகில் உள்ள மருதையாற்றுப் பாலம், பெரும் வெள்ளத்தால் நீரில் மூழ்கியது. அதனால் தூத்துக்குடி விரைவுத் தொடர்வண்டி, பாலத்திலிருந்து விழுந்தது. நீரில் மூழ்கி 140 பேர் மாண்டனர்.

இப்பொழுதும் அதே பாலத்தில் திருச்சி, மலைக்கோட்டை விரைவு வண்டி விழுந்து 25 பேர் இறந்து போனார்கள். இதற்குக் காரணம் வன்முறையாளர்கள் வெடிகுண்டு வைத்ததுதான் என்று அமைச்சர், அதிகாரிகள், வெடிகுண்டு ஆய்வாளர்கள் அனைவரும் ஒருமுகமாகக் கூறினர். ஆனால் நடுவண் தொடர்வண்டித் துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் மூளை, வேறு வகையாகச் சிந்தித்துப் பின்னர் ஒரு கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் பாலத்தில் 'தீயதேவதை' உள்ளதாம். அதனாலேயே வண்டிகள் கவிழ்கின்றனவாம். எனவே அந்தத் தீய தேவதையை விரட்ட இந்தப் பாலத்தில் சிறப்புப் பூசை நடத்தலாமாம். எப்படியிருக்கிறது இந் நாட்டின் நடுவண் அமைச்சரின் ஆராய்ச்சி! இதுபோன்ற கோணல் அறிவு படைத்தவர்களையெல்லாம், இங்கு அமைச்சர்களாக வைத்

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

ஐயோ தமிழகமே!

அடிமைகளின் கடமையுணர்வு(!?)

1985-இல் ஆசிரியர்கள் **போராட்டம்** நடந்தது அல்லவா? அதில் கலந்து கொள்ளாதவர்களைக் **கடமை உணர்வுள்ளவர்கள்(!?)** என்று பாராட்டியுள்ளது அரசு—அவர்களுக்கு 'ஈட்டிய விடுப்பு' நாள்களை ஊக்கப் பரிசாக அளித்தும் இருக்கிறது. அச்சமும் அடிமைத் தனமும் நீங்காத கோழைத் தன்மைக்குத்தான் 'கடமை உணர்வு' என்று பெயரோ?

நடிப்பது ஏனோ?

'தெலுங்கு தேசம்' கட்சிக்கு நிறையக் கடனும் செலவும் உள்ளதாம். நன்கொடை திரட்டினால் கட்சி முதலாளிகளின் வயப்பட்டு விடுமாம். எனவே திரைப்படத்தில் நடித்துப் பொருள் திரட்ட முடிவு செய்துள்ளார் **என். டி. இராமாராவ்**. தமிழக முதல்வர் கூடத் திரைப்படத்தில்(வேறு) நடிக்கப் போகிறாராமே! அது ஏனோ?

'சம...ரசப்' பேச்சு!

5-3-87 அன்று சட்டப் பேரவையில், அ. தி. மு. க.—இந்திராப் பேராயம் உறவானது கணவன் - மனைவி உறவு போன்றது என, **பர். சமரசம்** பேசியுள்ளார். இதுபற்றிச் சுவையான சொல்லாடல்களும் நிகழ்ந்துள்ளன. நடுவணரசு என்னும் ஆண்டைக்கு இத் தமிழ்நாடு மாநில அரசு மெய்யடிமையாகச் செயல்படுகிறது. கணவன்—மனைவி உறவும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்கிறாரோ **சம...ரசம்?**

யாருக்கு அறிவில்லை?

"நடுவணரசுக்கு அறிவு விழிப்பு (ஞானோதயம்) பிறப்பதற்குள் தமிழினம் பூண்டோடு அழிக்கப்பட்டு விடும்" என்று **என். வி. என். சோமு** நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார். வேண்டுமென்றே திட்டமிட்டு நடிக்கும் நடுவணரசுக்கு 'அறிவு விழிப்பு' பிறக்கும் என எதிர்பார்க்கிறார் போலும் அவர். இந்தத் தமிழ்நாட்டு மக்களும் அடிமைகளே என்பது தெரிந்தும் ஆவன செய்யாமல் நெளிக்கும் தமிழகத் தலைவர்களுக்கு 'அறிவு விழிப்பு' ஏற்பட்டால் போதுமே!

காவலோ காவல்!

காவலர்கள் அடித்துத் தாக்கி உடம்பெல்லாம் ஏற்படுத்திய காயங்களை **மலர்மன்னன்** (தி. மு. க.) சட்டமன்றத்தில் காட்டினார். **"உண்மையை வரவழைக்கக் காவலர்கள் துன்புறுத்துவது தவறில்லை"** என அவைத் தலைவர் பாண்டியன் கூறியிருக்கிறார்! அறமன்றங்களின் தீர்ப்பளிக்கும் பணிகளைக் கூட அவைத் தலைவரே எடுத்துக் கொண்டாலும் வியப்பில்லை!

துயர விளையாட்டு!

இராமநாதபுரம், பசும்பொன், மதுரை முதலிய மாவட்டங்களில் கொடிய வறட்சி! 'இந் நிலைகள் முறையாகத் தெரிவிக்கப்படவில்லை' என்கிறது நடுவணரசு. தமிழகப் பொருளமைச்சர் நாவலரோ, "அவ்வப்போது ஏற்படும் நிலைகளைத்தான் தெரிவிக்க முடியும். விரிவான அறிக்கை கடைசியில்தான் அளிக்க முடியும்", என்கிறார்... இதற்கிடையில் வறட்சி நீங்குமோ? அல்லது வாழ்வு பறிபோகுமா? என மக்கள் கலங்கி நிற்பதுதான் மிச்சம்!

ஏழைகள் என்ன ஆவார்கள்?

"ஏழைகளின் தலை எழுத்தையே மாற்றிக் கொண்டிருக்கிறார் புரட்சித்தலைவர்!"-இது முன்னாள் அமைச்சர் **காளிமுத்து**வின் மதிப்பீடுகளுள் ஒன்று. அப்படியென்றால் இனி தமிழகத்தில் ஏழைகள் இருக்க மாட்டார்கள்(?) என்பது பொருளா? அல்லது தமக்கு மீண்டும் அமைச்சர் பதவி கிடைக்க வேண்டும் என்ற ஏக்கமா?

சாதி அமைப்புகள்!

'சாதி அமைப்புகள் (சங்கங்கள்) வைத்துக் கொள்ள அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது' என்று அமைச்சர் **வி. வி. சாமிநாதன்** ஒரு கேள்விக்கு விடையளித்திருக்கிறார். ஆனால், 'அரசியல் சட்டத்தில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை' என வி. பி. **சிந்தன்** கூறுகிறார். தேவையற்ற இந்த அமைப்புகளைக் கலைக்க வழி விடாமல் வழக்காடிக் கொண்டிருப்பது இரு தரப்பினருக்கும் ஊதியமானது என்று கருதுகிறார்களோ?

தலைகொழுத்த பேச்சு!

"தமிழ்நாட்டில் அரசு செயல்படாமல் இருக்கிறது!" என்று இ. பேராயச் சட்டமன்ற உறுப்பினர் **சவுரிராசன்** குற்றஞ்சாட்டியுள்ளார். தாங்கள் விரும்பியபடியெல்லாம் தலைகொழுத்த தனமாகப் பேசவும் செயல்படவும் முடிவதால் இப்படிக் கூறுகிறாரோ என்னவோ?

நெறிமன்றங்கள் தேவையா?

புதுவையில் ஆளுங்கட்சியிலிருந்து விலகியதற்காக இரு சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கப்பட்டனர். சென்னை உயர் நெறிமன்றம் இதற்கு இடைக்காலத் தடையிட்டது. ஆனால் புதுவை சட்டப் பேரவைத் தலைவர் இதை **மதிக்கவில்லை**. ஆகவே நெறிமன்றத்தை அவமதித்ததாகப் புதுவை அரசு மீது அவ் உறுப்பினர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அதன் பின்னும் 'உயர்நெறிமன்றத்தின் குற்றச்சாட்டு அறிக்கையைப் பெறப்போவதில்லை' என்கிறார் அவைத்தலைவர். இந்த நிலையில், நெறிமன்றங்களுக்குக் கட்டுப்படாத சட்டமன்றங்களே போதுமே!

-வணங்காமுடி-

Scanned with CamScanner

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும் ; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4 இதழ் எண்-83 (20-3-1987) பகுதி 44-45.

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்

துணையாசிரியர்கள்:
தென்மொழி.கல்லை.அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா.சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,
தமிழவேள்.

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனார்,
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி.த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	100-00
வாணாள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

0 இராசீவ் காந்தி உயிர் மட்டும் வெல்லமன்று!
0 ஒவ்வோர் உயிரும் பாதுகாப்புக்குரியதே!
0 மக்கள் தலைவர் என்றால் காட்சிக்கு எளியவராகவே இருத்தல் வேண்டும்!
0 இல்லெனில் அவர் ஒரு கொடுமையாளரே!

ஆங்கிலேயர் இந்தியாவைக் கொடுத்துவிட்டுச் சென்ற பிறகு, அவர்கள் செய்த அதே பணிகளை முதலாளியப் பற்றோடு (எசமான விசுவாசத்தோடு) திறம்படச் செய்து வருகின்றனர் நம் ‘இந்தி’யர்கள். ஆங்கிலேயன் சுரண்டியது போலவே இவர்களும் சுரண்டிக் கொழுக்கின்றனர். அவன் உடுத்திக் கொண்டது போலவே, அவன் வாழ்ந்தது போலவே, அவன் அழித்த பண்பாட்டு, கலையியல் நிலை போலவே, அவன் திணித்த ஆங்கிலக் கல்வி போலவே — இவர்களும் இவர்களின் நடைமுறைகளை, வாழ்வை, பண்பாட்டை, மொழியை இந்த இந்தியச் சிறையில் கட்டுண்ட அனைத்து மக்கள் மீதும் திணிக்கத் தவறவில்லை.

ஆனால் அதற்கு மேலாக இவர்கள் கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பது, தொண்டை வரளப் பேய்க்கத்தல் கத்துவது எல்லாம் ‘இந்திய ஒற்றுமை’— என்றுதான் பறைசாற்றப் பெறுகிறது.

‘எந்த ஒரு கருத்துக்குப் பின்னும் ஒரு வகுப்பின் நலன் உள்ளடங்கியிருக்கும்’

— என்ற இலெனினியப் பாடத்தின்படி, இன்றைக்கு இந்திய ஒற்றுமையைப் பற்றி நாக்கு வரளக் கத்துவது எந்த வகுப்பினர் (வர்க்கத்தினர்) என்பதைப் பார்ப்போமானால் தெரியும்.

ஆளும் வகுப்பினர் சுரண்டிக் கொழுப்பதற்காகவே, இந்திய முதலாளிகளும், பன்னாட்டு முதலாளிகளும் சுரண்டிக் கொண்டிருக்கவே, இந்திய ஒற்றுமை, ஒற்றுமை எனப் பாதுகாக்கப் படுகிறது.

இந் நிலையில் இந்த இந்தியப் பாதுகாப்பைப் பற்றிப் பேசும் ஆளும் அரசு எதைப் பாதுகாக் தெரியுமா?

முழுமையாக அவர்களைப் பாதுகாத்துக் கொள்கிறது.

—அவர்கள் உயிர்கள் காக்கப்பட வேண்டும் என்பதையே அவர்கள் பெரிதாக எண்ணுகிறார்கள்.

—அதற்காக இந்தியாவில் வாழ்கிற அனைத்து மக்களையும் பூண்டோடு அழிக்கக் கூட அவர்கள் தயங்கப் போவதில்லை.

—அசாமில், பஞ்சாபில், ஆந்திராவில், மிசோரத்தில், தமிழ்நாட்டில் எத்தனை ஆயிரக் கணக்கினர் இந்தியப் பாதுகாப்பு என்ற பெயரில் கொலை செய்யப் பட்டனர் தெரியுமா?

—எத்தனை ஆயிரக் கணக்கினர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்!

—ஆக இன்றைய இந்தியப் பாதுகாப்பு இவர்களுக்காகத் தான் என்பது தெளிவு.

0 டெல்லியில் 2 ஆயிரக் குறுக்கம்(ஏக்கர்) பரப்புள்ள இராசீவ் வீடு சுற்றி 1800-படை வீரர்கள்.

0 அந்தப் பகுதிக்கு இசைவின்றி ஈ கூட உள்ளே வரக்கூடாது.

0 இராசீவ் வீட்டிலிருந்து தொலைவில் உள்ள 'சாம்ராட்' விடுதியின் மேல் இரண்டு மாடிகள் இடிக்கப்பட்டன. அங்கிருந்து பார்த்தால் இராசீவ் வீடு தெரிவதே இதற்குக் காரணம்.

0 இராசீவ் சாப்பாட்டுக்கென வாங்கிவரப் பெறும் அனைத்துப் பொருள்களும் வேதியியல் (Chemical) ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பின்னரே சமைக்கப் பெறுகின்றன.

0 சமைக்கப் பெற்ற உணவு இரண்டு மணி நேரத்திற்குப் பின் காக்கப் பெறுவதில்லை. ஒருவேளை இராசீவ் அதன் பிறகு சாப்பிட வருவாரானால் புதிய உணவு செய்யப் பெறுகிறது. முன்பு செய்த உணவு முழுவதும் கொட்டப் படுகின்றது.

0 இராசீவிற்குப் படைக்கப் பெறும் உணவை 32-பேர்கள் சுவைத்துப் பார்க்கின்றனர். அதில் நஞ்சு கலந்துள்ளதா எனக் காவல் துறை அதிகாரிகள் ஆய்வு செய்தே கொடுக்கின்றனர்.

0 இராசீவ் குடியிருக்கும் வளாகம் (campus) முழுமையும் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி படப்பிடிப்பான்களும் மெல்லிய ஒலியையும் பதிவு செய்யும் பதிவான்களும், மறைமுகமாகப் பதித்து வைக்கப் பட்டுள்ளன.

0 இராசீவ் புறப்பட்டு எந்த ஓர் இடத்திற்கும் செல்வதற்கு 24-மணி நேரத்திற்கு முன்பாக விருந்தே அவ்வழி முழுமையும் அலசி ஆய்வு செய்யப்படுகின்றன.

0, இவ்வகைப் பாதுகாப்புகள் இராசீவ் காந்திக்கு மட்டும் அல்ல. அனைத்து அதிகார 'வெறியர் களுக்கும் உண்டு.

0 எல்லா அமைச்சர்களுக்கும் குண்டு துளைக்காத உடைகளும் பாதுகாப்பு ஆட்களும் எனக் கடுமையான செலவு வேறு.

—இவ் வகையில் இவர்கள் பாதுகாப்பே இந்தியப் பாதுகாப்பு என முழங்கிக் கொண்டிருக்கும், இவ் வதிகார வெறியர்களின் ஆட்டங்கள் அழிக்கப்பட்டாலொழிய மக்கட்கு வாழ்வே இல்லை.

இந்தியப் பாதுகாப்பு எனக் கூச்சலிடும் இவர்கள்தாம் உண்மையான மக்கள் எதிரிகள்.

—மக்களைக் கொலை செய்யும் கொடுநெறியர்கள்(தீவிரவாதிகள்)! —வி. வே.

—அடிப்படை: 'புதிய கலாச்சாரம்' -பிப். 1987.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தால் இதுவும் சொல்வார்கள். இன்னும் சொல்வார்க்ள். அவர்களுக்கு நாம் ஒன்று கூறுவோம். தீய தேவதைகள் பாலத்தில் இல்லை; பாராளுமன்றத்திலேயே உள்ளனர். பாலத்தில் உள்ள தீய தேவதைகளைப் பூசை செய்து ஒட்டினால், தொடர்வண்டிகள் கவிழாதென்றால், பாராளுமன்றத்தில் உள்ள தீய் தேவதைகளைப் பூசை செய்து ஓட்டினால், இந்த நாடே நலம் பெற வாய்ப்பேற்படுமே!

அதுவுமன்றி இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். அமைச்சரின் கருத்துப்படி மருதையாற்றுப் பாலத்தில் உள்ள தீய தேவதையால் தொடர்வண்டி கவிழ்ந்தது என்றால், பின் வன்முறையாளர்கள் எங்கே வந்தார்கள்? குண்டு எவ்வாறு வெடித்திருக்க முடியும்? மாதவராவ் சிந்தியாவுக்கு ஒன்றால் மனக் கோளாறாக இருக்க வேண்டும். அன்றால், தேசிய உணர்வை ஒப்புக் கொள்ளாதவர்கள் மீது ஏதாவது கெட்ட நோக்கத்துடன் குற்றங் கூறி அவர்களை எப்படியாவது அழித்துவிடும் பழியுணர்வு தலைக்கேறியிருத்தல் வேண்டும்.

இம் மூன்றில் அவர்க்கு எது பொருத்தம் என்பதை அவரே வெளிப்படுத்திக் கொள்ளட்டும். இவர்களைப் போன்ற உளறல் பெயர்வழிகளையெல்லாம் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்தார்களே அவர்களையும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களையெல்லாம் ஆமாம் 'சாமி' அமைச்சர்களாக அமர்த்தியிருக்கிறாரே நம்(!) இராசீவ் காந்தி அவரையுமே சொல்ல வேண்டும்.

இன்னும் இந்த நாட்டு மக்களின் நிலை எப்படியெப்படியெல்லாம் போகப் போகிறதோ, அதைக் காலமே நமக்குச் சொல்ல வேண்டும்!

Scanned with CamScanner

முன்னிதழ்த் தொடர்ச்சி

தொடர்-3

மொரீசியசு தீவில் தமிழர்கள்!

முதன்முதலில் குடியேறிய தமிழர்கள் தம் குழந்தைகளுக்குத் தமிழறிவை ஊட்டினர். அவர்களின் இரண்டாம் தலைமுறையினரில் பலரும் மூன்றும் தலைமுறையினரில் பேரளவான எண்ணிக்கையினரும் ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியும் கற்கத் தொடங்கினர்; கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ்க்கல்வி புறக்கணிக்கப்பட்டது. பிரெஞ்சு மொழியின் திரிந்த வடிவமான கிரியோல் மொழியையே பேசுவதும் கேட்பதும் ஆன சூழலிலேயே காலமெல்லாம் இருக்க நேர்ந்ததால் நகரங்களில் வாழ்ந்த தமிழரின் பின் தலைமுறையினர் விரைவில் தமிழ்பேசுவதை விடுத்துக் **கிரியோல்** (creole) மொழி மட்டுமே பேசினர்.

தொடர்ந்து மொரீசியசில் குடியேறியவர்கள் பீகார், மற்றும் பிற இந்திபேசும் பகுதியினராவர். கல்கத்தியர்கள் என அழைக்கப்பட்ட இம் மக்கள் தமிழர்களைவிட அதிகமாயிருந்தனர். கரும்புத் தோட்டங்களில் வாழ்ந்த தமிழர்கள் இந்திபேசும் சூழலின் காரணமாக வீட்டிலுங் கூட இந்திபேசத் தொடங்கினர். எனினும் நகரத்துத் தமிழர்கள் போல் அல்லாமல், தம் தாய்மொழியையும் நன்கு காத்து வந்தனர்.

1810-இல் ஆங்கிலேயரால் இக் குடியேற்றம் கைப்பற்றப்பட்டதிலிருந்து அண்மைக் காலம் வரை இந்தியப் படைப்பிரிவுகள் இதன் காவலுக்காக நிலையாக நிறுத்தப்பெற்றிருந்தன.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் சென்னைப் படைப்பிரிவு ஒன்று இத் தீவில் நிறுத்தப் பட்ட பொழுது தமிழர்கள் மலைப்பகுதியிலிருந்து சமநிலப் பகுதிக்குச் சென்றனர்.

அந்தச் சென்னைப் படைப் பிரிவில் **துளசிங்க நாவலர்** என்ற வீரர் ஒருவர் இருந்தார்; அவர் ஒரு தமிழறிஞர். இளைஞர் சிலருக்கு அவர் தமிழ் கற்பித்தார். அவ்வாறு கற்றவருள் சிலர் தமிழில் மிகவும் வல்லவராயினர். மொரீசியசு தமிழிலக்கிய வரலாற்றில் புகழ்வாய்ந்த **பெருமாள் சுப்பராயன்** அவர்களுள் ஒருவர். அவர் ஒரு பாவலரும் சிறந்த பேச்சாளரும் ஆவார். பிரெஞ்சு மொழியில் **'கை-டி-டெரமண்ட்'**, எழுதிய **'ராவெங்கர்'** என்னும் புதினத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்; **'சிந்தனைப் பாடல்கள்'** என்ற பாடல் நூலை இயற்றியவர். திரு வி. க. அரிய பாராட்டுரைகளால் அதற்கு முன்னுரை வழங்கினர். அவர் இயற்றிய பாவடிவ நாடகம் ஒன்றும் பல பாடல்களும் எண்ணற்ற அங்கதங்களும் அச்சிடப் பெறவில்லை. அவர் மிகவும் வறியவராக இருந்தபோதும் தமிழ்த் தொண்டினை விடாது செய்தார். நான்கு இலவயத் தமிழ்ப் பள்ளிகளைப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார். அவருடைய சிறந்த மாணவர்களுள் **இராசரத்தினம் சங்கிலி** முதன்மையானவராவர்.

சௌந்தராசனும் கே. இராமனும் துளசிங்க நாவலரின் சிறந்த மாணுக்கர்களுள் மேலும் இருவர்.

இக் காலத் தமிழருள் தமிழ்த்திறம் சான்றவர்களாகக் குறிப்பிடத் தக்கவர்கள் **சுப்பையா வேலகோவிந்தன், வடிவேல் செல்வன், சங்கிலி உடன்பிறப்புகள், அருணுசலம்** ஆகியோர்.

சுப்பையாவும் சங்கிலி உடன்பிறப்பினரும் தம் மிகுதியான நேரங்களை இலவயமாகத் தமிழ் கற்பிப்பதில் ஈகம் செய்தவர்களாவர்.

அண்மைக் காலம் வரை மொரீசியசில் தமிழ் அழிந்து விடுமோ என அஞ்சப் பெற்றது. நல்லவேளையாகக் கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. தமிழர்கள் தம் மொழி, பண்பாட்டில் காட்டிவரும் ஆர்வம் நம் தாய்மொழியின் ஒளிமிக்க எதிர்காலத்துக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது.

தமிழிளைஞர்கள் பல மிடற்றிசையிலும் கருவியிசையிலும் மிகவும் கவனம் செலுத்தி வருகின்றனர். சிலர் இயற்கை மீத்திறம் பெற்றவராக உள்ளனர். தக்க வழிகாட்டுவதன் வழி வல்லமைசான்ற பாடகராகிடவும், இசைக்கலைஞராகிடவும் இயலும்.

தமிழ்ப் பெண்டிர் சிலர் பரத நாட்டியம் போன்ற உயர் நடனக் கலைகளில் பேரார்வம் காட்டுகின்றனர். உரிய வழிகாட்டுதல் இன்மையால் அவர்களால் அக் கலையை வளர்த்துக் கொள்ள இயலவில்லை. இந்தியாவிலிருந்து இதற்கு உதவிபெற முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

குறிப்பிடத் தக்க அளவில் ஏறத்தாழ 12 விழுக்காடு தமிழர்கள் கிறித்தவ மதச் சார்பினராயிருப்பினும் பெரும்பாலோர் சிவனிய - மாலிய நெறியினரே. தமிழர்களின் 120 கோயில்கள் ஒரு கூட்டமைப்பாக வகுக்கப்பட்டுள்ளன. அக் கூட்டமைப்பு அரசு அளிக்கும் சமய நிறுவனப் பண உதவியில் தமிழர்களின் பங்கைப் பெற்று எல்லாக் கோயில்களுக்கும் பகிர்ந்தளிக்கிறது. பொங்கல், விளக்கணி, காவடி, சிவராத்திரி என்னும் நான்கு தமிழர் திருவிழாக்கள் மொரீசியசு தீவில் பொது விடுமுறை நாள்களாக உள்ளன.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

சிதம்பரமோ, காஞ்சிபுரமோ, சுரண்டுவது பார்ப்பான்தான்!

காவிரி நீர்ச் சிக்கல்,
கங்கை - காவிரி இணைப்புச் சிக்கல்,
தெலுங்கு - கங்கைச் சிக்கல்.

—இப்படிச் சிக்கல்கள்தாம் பெருகிக் கொண்டிருக்கின்றனவே தவிர, தமிழர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைத்தபாடில்லை.

வளமான தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் நீரின்றிக் காய்கின்றன.

சென்னை - குடிநீர் இன்றி வரள்கிறது.

—ஆனால் சிதம்பரம் நடராசன் - கோயிலின் சிலையை மட்டும் குளிப்புச் செய்ய கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டது.—ஆமாம்! சிதம்பரம் நடராசன் கோயிலுக்குக் குடமுழுக்காம்.

திருச்சி சிற்றூர்களிலிருந்து மக்கள் தண்ணீர் இன்றி வாழ முடியாமல் ஓடிவந்து கொண்டிருக்கும் பொழுது—

0 24-மணி நேரமும் பாலும், உணவும் 'பத்தர்' களுக்குக் கொடுக்கப்பட்டன.

0 சிதம்பரத்தில் 16 இடங்களில் குடிநீர்க் குழாயும், 50 இடங்களில் புதிய அடிநீர்க் குழாய் போடப்பட்டன.

0 நான்கு தேர்த் தெருக்களும் அகலப்படுத்தப் பட்டன.

0 அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், கல்லூரிகளும், பள்ளிகளும் பிப். 9, 10, 11 ஆகிய மூன்று நாள்களில் செயல்படவில்லை. விடுமுறை விடப்பட்டது.

0 வானொலி, தொலைக்காட்சியினர் விழாக்காலக் கொட்டமாக வழக்கத்தைவிட அதிகமாகப் பூணூலை உருவிவிட்டுக் கொண்டனர்.

—அது மட்டுமா, என்ன!

0 காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ள தேர் ஒன்று 25-ஆண்டுக் காலமாக ஓடாமல் இருந்ததாம். அதையும் அதே நாளில் ஓடவைத்துள்ளார் காஞ்சி சிரி சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்.

—ஒரே காலத்தில் சைவ விழாவும், வைணவ விழாவும் பார்ப்பான்கள் தலைமையில் பலகோடிகளை வாரி இறைத்து நடந்துள்ளன:

"பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறுகும்
ஆரிய நாடு என்று அறி" —என்றும்
"உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கில்லை ஈடே"

—என்றும் பாரதிப் பார்ப்பான் சொன்னது போல, நாம் ஆரியப் பார்ப்பன ஆட்சியிலன்றோ அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

—இந்த அரசும், முதலாளியமும், பார்ப்பனிய இந்து மதமும் சேர்ந்து கொண்டு ஏழைத் தமிழ் நாட்டு மக்களைச் சாகடிக்கின்றனவே.

இவற்றினின்று விடுதலை பெறவேண்டி,
"இன்றைக்கே எழாமல்
என்றைக்குத்தான் எழுவோம்,
எண்ணிப் பார்ப்போம்!
என்றைக்குக் காலமினி
ஏற்றபடி கனிந்து வரும்,
இந் நாள் போல!"

என்பதைச் சிந்திக்க வேண்டாமா? —கூரம்பு.

மக்களை மயக்கிக் கொண்டிருக்கும் அரசியல் நடிகர்கள்!

'மதம் மக்களுக்கு ஒரு மயக்கப் பொருள்'—என்றார் மார்க்சு. 'மதம் கொடிய நஞ்சானது. அஃது இரு வகையில் அழிவு செய்து கொண்டுள்ளது. இனத்தை வெட்டிச் சாய்ப்பதும், நாட்டு முன்னேற்றத்தைச் சீரழிப்பதும் - அதன் அழிவுப் பணிகளாகும்'— என்றார் மாவோ.

—இன்றைய இந்தியத் துணைக் கண்டத்தில் தேசிய இன எழுச்சிகள் ஒடுக்கப்பட வேண்டியும், சுரண்டிக் கொழுத்துத் திரியும் முதலாளிய அரசுகளின் செயல்கள் மூடி மறைக்கப்பட வேண்டும் எனும் சிந்தனையிலும் - மதமும், கலைத்துறைச் சீரழிப்பும் நச்சு மரங்களாய் வளர்கின்றன.

திரைப்படத் துறையிலிருந்து இன்று அரசியலுக்கு வந்து விட்ட நடிகர்கள், அரசியல் ஆடுகளத்தில் நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்திய நாட்டின் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அப் பகுதி வாழ் மக்களின் சிக்கலைத் தீர்த்ததாகாது.

நாகரிக வளர்ச்சியிலும், பொருளியலில் ஏழ்மையிலும் இருக்கின்ற ஆந்திர மக்களிடம் அடிக்கடி உடைகளை மாற்றி மாற்றி நடித்துக் கொண்டிருக்கும் என். டி. இராமராவ் - தம் நடிப்பு ஆசையிலிருந்து விடுபடவே இல்லை.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

நாட்டு நடப்புகள்!

1. தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கம்... காட்டிய் பாதையில், நம் கவனம் திரும்புமா?

தமிழினத் தோன்றல்களே! 1986 டிசம்பர் 27, 28-இல் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கம் ஒப்போலை மூலம் எடுத்த முடிவு "முழு இறைமையுடைய தமிழ்நாடு" வேண்டும், என்பதாகும்! ஒப்போலை முடிவில் கிடைத்த மாற்றுக் கருத்துகளை நாம் ஆராய்தல் வேண்டும். அவை நம் அக முரண்பாடுகள் என்பதை மறுத்தல் இயலாது; மறத்தலும் கூடாது.

தேர்தலில் ஈடுபட்டவர் 241; இந்தியத் தேசியம் 7; மாநிலத் தன்னாட்சி 23; முழு இறைமை 208; செல்லாதவை 3.

'வெற்றி' பெறும் விடுதலையை நிலைநாட்ட நாம் 33 எதிர்ப்போலை பற்றிச் சிந்தித்தல் வேண்டும். 13.5 விழுக்காடு எதிர்ப்பு ஒரு பொருட்டன்று. என்றாலும், உ. த. மு. க. வில் ஈடுபாடு கொண்டவர்களிடையே உள்ள இந்த வேறுபாடுகளை - எதிர்ப்பை - எளிதாக எண்ணி விடுதல் ஆகாது.

உ. த. மு. க. விற்குள்ள, தமிழ்நாட்டு 'மக்கள் ஆதரவு' எவ்வளவு என்பதையும் நாம் கணித்தல் வேண்டாமா? இந்த 'அமைப்பு' வலிமையைக் கட்டி வளர்த்திட 'இதன் எல்லை' பற்றிய ஆய்வு வேண்டும். 'விடுதலை'ப் படையை உருவாக்கும் கருத்து ஆதரவாக மட்டுமே 'தீர்மானிப்பை' எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

முனைப்புள்ளது; வினைச் சிறப்பு இல்லை-
விருப்பம் உள்ளது; நிலைமை இல்லை-
கொதிப்பு உள்ளது; காரணம் விளக்கப்
படவில்லை.

களம் உள்ளது; 'வீரர்களே' இல்லை!
அதனால் சோர்ந்து விடமுடியுமா?

'ஓயவும், தலை சாயவும், மாட்டோம் என்றே ஒன்றுபடுவோம்!

2. போராடாமல் எப்படி?

ஆசிரியர் போராட்டம்; தமிழ்நாட்டில் ஒன்றுபட்ட ஆற்றலைத் திரட்டிக் காட்டியது; அதிகாரம், ஆணவம் அறிவின் முன் பணிந்தன. என்றாலும் கோரிக்கைகள் அப்படியே நீடிக்கின்றன. ஒரு சிறு சலுகைக்கே தளர்ந்துவிடும் ஆசிரியர் போராட்டம் எனக் கருதி அரசு பிளவு வேலையில் இறங்குகிறது.

ஆனாலும், போராட்ட அறிவிப்பு 'கூட்டு நடவடிக்கைக் குழு' மூலம் அரசிற்கும் மக்களுக்கும் தெரிவிக்கப் பெற்றது.

அரசு, 'குழு'வை அழைத்துப் பேசல் வேண்டும். இல்லை எனில் போராட்டம், அறிவித்தபடி தொடரும்.

அணிகளிடம் தளர்ச்சியுண்டாக்கும் முயற்சிகள் நடக்கின்றன. 'குழு'வின் 'தலைமை' பற்றிய 'குறை'கள் பெரிதுபடுத்தப்படுதலைக் காண்கின்றோம்.

'அரசியல்', 'கட்சி' என்பவை தீண்டத்தகாதவை என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப் படுகின்றது.

அரசுக்கு 'ஆதரவு', 'எதிர்ப்பு' என அணி பிரிக்கப்படுகின்றது.

'கூடி முடிவு' எடுத்த அமைப்பின் மூலமே, போராட்ட அறிவிப்பும், தவிர்ப்பும், விலகலும் வருதல் வேண்டும். இந்தவுணர்ச்சி ஆசிரியர்களிடம் இல்லையேல் என்னென்பது?

'அறிவினால் ஆவதென்ன?' என்று வினவத் தோன்றுகின்றது!

'அரசு' அதன் கட்டளைகளைக் கல்வியாக வழங்கிவரும் 'கூலிகளை' முறையாக நடத்துதல் வேண்டும். ஆசிரியர்களைக் கூலிகள் எனக் கூறுவதால் வருந்திடக் காரணம் இல்லை. உண்மை நிலைமை அதுதானே!

கூலியானாலும் நாம் அறிவினை விற்கின்ற உழைப்பாளரே. உழைப்புக்கு விலை - சமவிலை தர மறுத்தால் போராடாமல் முடங்கி, எதிர்ப்புக்கு மடங்கி அடங்கிப் போவது... எப்படி?

—பறம்பை அறிவன்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

—எப்படியோ அமிதாபச்சன், வைசெயந்திமாலா, சிவாசி கணேசன், எம் சி. இராமச்சந்திரன், என். டி. இராமராவ், பானுமதி, செயலலிதா, ஐசரி வேலன், பிரேம் நசீர் - என்று திரைப்பட வழியிலான சுரண்டல் கூட்டங்கள் இன்றைக்கு அரசியலிலும் வாய்வைத்து உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன.

உழைக்காத முதலாளிகளோடு கூட்டுச்சேர்ந்து கும்மாளமிடும் இந்த அரசியல், கலையியல் ஓநாய்கள் - என்றைக்கு உழைக்கும் மக்களால் ஆட்சி அமைப்பிலிருந்து விரட்டி அடிக்கப்படுகின்றார்களோ, அன்றைக்கே அம் மக்கள் வாழ்க்கைக்கான விடிவு நாளாகும். —மா. பெ

குடிப்பழக்கம் கொடுத்தது அரசு!

எந்த ஒரு செயலுக்குப் பின்னும் ஒரு வகுப்பின் (வர்க்கத்தின்) முத்திரை இருக்கிறது- என்று இலெனின் குறிப்பிட்டது எந்த அளவு உண்மையாகிறது!

இன்றைக்குத் தமிழ்நாட்டின் அரசியலில் எல்லா செயல்களுக்கும் பின்னால் ஆளும் பிரிவினரின் முத்திரையும், முதலாளியப் பார்ப்பனிய முத்திரையும் ஆழமாகவே பதிந்திருக்கின்றன.

'குடிப்பதை நிறுத்த வேண்டும்' - என்று உண்மையிலேயே இந்த அரசு கருதுமானால் மதுவிலக்கை நடைமுறைப் படுத்தியே அல்லவா வைத்திருக்க வேண்டும்.

அதுவல்லாமல் கொள்ளையடிப்பதற்காகவே ஏராளமான நரு(சாராய)க் கடைகளைத் திறந்துவிட்டது அரசு; அதனால் குடிக்காதவனும் குடித்தான். குடிக்கிற நிலைக்கு ஏற்ப அவனவன் உடல் தன்மை மாறிவிட்டது. இனி குடிக்காவிட்டால் அவன் உடல் இயங்காது. இப்படி ஏராளமான பேர் நோய் கண்டு நாளும் மருத்துவமனையில் சேர்க்கப் பெறுகின்றனர்.

மேலும் மறைவிடங்களில் காய்ச்சப்பெறும் கள்ளச் சாராயத்தால் இறந்து போவோர் பட்டியல் கூடிக்கொண்டே இருக்கிறது.

அறிவிப்புச் செய்து அரசு சுரண்டிக் கொண்டிருந்தது போய், இன்றைக்குக் கள்ளச் சாராயத்தால் ஆளும் கட்சி கொடுநெறி அரம்பர்கள் (ரவுடிகள்) கொள்ளையடித்துக் கொண்டிருக்க அரசு கவனிக்காததுபோல் பங்கு வாங்கிக் கொள்கிறது.

—இவை யாவும் பொது உண்மை,

தமிழ்நாட்டில் விலக்குச் செய்தது சாராயத்தையும், கள்ளையும் மட்டும்தாம். 'பிராந்தி' 'விசுக்கி', 'ரம்', 'வொயின்', போலும், அரசும் - முதலாளிகளும் சேர்ந்து பன்னாட்டு மூலப் பணத்தோடு கொள்ளையடிக்கும் பொருள்களை விலக்குச் செய்யவில்லை. அவை மிக விலையுடையன. மிக விலையுடைய அவை பணக்காரர்களாலேயும், இடைத்தட்டினர் - உதிரிகளா (Lumper)லேயுமே குடிக்கப் பெறுகின்றன.

கூழுக்கே வாடிக்கொண்டிருக்கும் குப்பனும், சுப்பனும் எப்படி அதைக் குடிப்பான்? எனவே உடலுழைப்பினால் சோர்வுற்று, அதன்பின் பழக்கமான குடி வேட்கைகொள்ளும் அவன், தன் உழைப்பை, தன் உழைப்பின் கூலியை இக் குடிக்காகவே முழுக்கச் செலவிட வேண்டியவனாக இருக்கிறான்.

—இந்த நிலை கண்டு அரசு அருள் காட்டப் போகிறதாம்.

—எப்படி தெரியுமா?

—'சீனதா ரம்'- என்று ஒன்றைக் குறைந்த விலைக்குக் கொடுக்கப் போகிறதாம். அது வேறு ஒன்றும் இல்லை, வண்ணம் கலந்த எரிசாராயமே!- குடலை அரித்துத் தொலையிடும் கொடிய நஞ்சே! —எப்படி இருக்கிறது அரசின் அருள் பார்வை பார்த்தீர்களா?

—அந்த அளவு அக்கறையுள்ள அரசு, தீங்கு குறைந்த தென்னை, பனை - கள்ளை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்து, மக்கள் அவற்றையே குடிக்க ஏற்பாடு செய்யலாமே.

உண்மையில் உழைத்துச் சோர்வுறும் பாட்டாளி மக்களின் ஓய்விற்காக, இயற்கைப் பொருளான கள்ளைத் தடை செய்துவிட்டு, முதலாளிகள் சுரண்டிக் கொழுப்பதற்காக இந்த வெளிநாட்டு மதுப் பொருள்களைத் திணிக்க மட்டுமே இந்த அரசு சூழ்ச்சி செய்து தடை செய்துள்ளது.

முதலாளிகளும், பணக்காரர்களும் ஏழை மக்களைச் சுரண்டி மயங்கித் திரிய திறந்துவிட்டிருக்கும் மதுப் பொருள் கடைகளை உடைத்தெறிவோம்!

—பொதுத் தொண்டன்.

செய்தி தெரியுமா?

—இந்தியச் சிறையின் தேசிய மொழிகள் 15. ஆனால் 'அகில' இந்திய வானொலி நிலையம் 19 மொழிகளில் செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது. அதில் இந்திச் செய்திகள் மட்டும் ஒவ்வொரு நாளும் 20 முறை ஒலிபரப்பப்படுகின்றன. ஆங்கிலச் செய்தி 18 முறை. மற்ற மொழிச் செய்திகள் குறைந்தது ஒரு முறையும்; மிகுதியாக மூன்று முறையும் ஒலிபரப்பாகின்றன.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில பகுதிகளில் திருவள்ளுவர், பாரதி நாள்கள் ஆண்டுதோறும் கொண்டாடப் பெறுகின்றன.

தமிழினம் மேலும் மேலும் முன்னேறி எதிர்காலத்தில் மொரீசியசு தீவினர் வளமும் சிறப்பும் அடையச் செய்வதில் முதன்மையான பங்கு பெறும் என நம்புகிறோம்

(ஏப்பிரல், 1966-இல் மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் எம். சங்கிலி ஆங்கிலத்தில் வாசித்தளித்த கட்டுரையிலிருந்து)

மொழியாக்கம்: 'ஆலன்'

அறுப்பவனை நம்பும் ஆடுகள்!

இன்றையச் சூழலில் வெட்டப்படும் ஆடுகளாக உள்ளவர் நம் தமிழினத்தினர்தாம். ஆனால் யாரால் வெட்டப்படுகிறோம் என்பதைத்தான் இதுவரை பலரும் விளங்கிக் கொள்ளவில்லை.

தமிழீழ மக்களை ஒருபுறம் படைகளைக் கொண்டுமுற்று கையிட்டுச் சீரழித்துக் கொல்வதும், எஞ்சியுள்ளோரையும் உணவு, எரிபொருள் தடைகளால் பட்டினி போட்டுக் கொல்வதுமாக நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு யார் காரணம்?

தமிழகத்தில் தஞ்சம் புகுந்த போராளிகளைப் பொருட்படுத்தாமல், இந்திய அரசும், சிங்கள அரசும் நடத்திய ஒப்புரவுப் பேச்சு என்னும் சூதாட்டத்திலே அமிர்தலிங்கமும் அவர் கூட்டணியும் பகடைக் காய்களாக உருட்டப்படும் போதே "தமிழ்நிலம்" இதழ் மிகக் கடுமையான முறையிலே அமிர்தலிங்கத்திற்கு வேண்டுகோளாகவும், எச்சரிக்கையாகவும் தெளிவுறுத்தியது.

அதை அமிர்தலிங்கம் கூட்டணியார் புறக்கணித்து, இந்திய அரசின் கைப்பாவையாகி, எதிரி தன்னை வலுப்படுத்திக் கொள்ளவும் நல்லவனாகக் காட்டிக் கொள்ளவும் வாய்ப்பளித்துத் தம் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டு இன்று ஓலமிடுகிறார்.

சிங்கள அரசு இந்தியாவின் வழியாகப் படைக் கருவிகளும், வெடி மருந்துகளும் போதுமான அளவுக்கு மேலேயே இன்று சேமித்து வைத்துள்ளது.

இந்தியப் பாராளுமன்றத்தில், இலங்கை அரசுக்குத் திருவனந்தபுரம் வழியாகச் சென்ற ஒரு படைக்கலமேற்றிய வானூர்தியை ஏன் தடுத்து நிறுத்தியிருக்கக் கூடாது என்ற நடுநிலையான கேள்விக்குத் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி "அதில் என்ன தமிழர்களைக் கொல்வதற்காக என்று எழுதியிருக்கிறது" என்று திமிராக விடையளித்து அவரின் உள்ளுணர்வைக் காட்டினார். (ஆனால் இன்று அந்தக் கருவிகளால்தாம் தமிழர் கொல்லப்படுகின்றார்கள் என்பது இராசீவுக்குத் தெரியாமலா போகும்?)

அமிர்தலிங்கம் மூலம் நடத்திய அந்த நாடகம் முடிந்தவுடன், இந்திய அரசும் சிங்கள அரசும் போராளிகள் இயக்கங்களுடன் அதே "ஒப்புரவுப் பேச்சு" என்ற நாடகத்தை "திம்பு" நகரில் மீண்டும் திட்டமிட்டுத் தொடங்கியது.

அதன் முதல் நடவடிக்கையே போராளிகளுக்கு ஐயப்பாட்டைத் தந்தாலும் பேச்சு நடந்து கொண்டு இருக்கும்போதே இலங்கை அரசு தமிழீழத்தில் தாக்குதலைத் தொடங்கியதாலும் இந்திய அரசின் நாடகம் அரங்கேற முடியவில்லை.

தொடர்ந்து இந்திய அரசு போராளிகளைப் பணியவைக்கும் நோக்கத்தோடு நாடு கடத்தல், கருவிகளைப் பறிமுதல் செய்தல், போராளிகளை இழிவுபடுத்திச் சிறைப்படுத்தல் என்றவாறாகப் பல வழிகளில் முயன்று தோல்விகண்டதால் இன்று இந்திய அரசு பழிவாங்கும் உணர்வுடன் நடந்து வருகின்றது.

தளபதி பிரபாகரன் அவர்கள் அளித்த நேர்காணலில் மிகத் தெளிவாகவே இந்திய அரசின் உள்நோக்கத்தை வெளிப்படுத்திவிட்டார்.

தளபதி பிரபாகரன் அவர்கள் அளித்த அந்த நேர்காணல் மூலம் இதுவரை இந்திய அரசு நடத்தி வந்த போலி நாடகங்கள் அம்பலத்திற்கு வந்தன. அதில் முகாமையானது இதுதான். "சிங்கள அரசு முழு வீச்சில் தமிழ் மக்களைப் படைகளின் மூலம் அழித்துக் கொண்டே பேச்சு உறவு நாடகம் நடத்துகிறது. இந்திய அரசு போராளிகள் என்ன கோருகிறார்கள் என்பதை இலங்கை அரசுக்குத் தெரிவிக்காமலே இலங்கை அரசு அளிக்கும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று வற்புறுத்தியதோடு அல்லாமல், எங்களிடம் இருந்த செய்தித் தொடர்புக் கருவிகளைக் கூட பறிமுதல் செய்து விட்டது." இந்த நிலையில் தமிழகத்தில் இருந்து வெளியேறுவதுதான் சரி என்று கருதி தளபதி பிரபாகரனும் போராடப் போய்விட்டார்.

இந்த நிலையில் PLOT, EPRLF போன்ற இயக்கங்கள் இந்திய அரசுதான் எங்களுக்கு உதவ வேண்டும் என்று கெஞ்சியே விடுதலையைப் பெறத் துடித்துக் கொண்டிருக்கின்றன.

இதுவரை கூறி வந்த செய்திகளின் மூலம் யார் தமிழர்கள் என்னும் ஆடுகளை அறுப்பவன் என்று விளங்கியிருக்கும். இன்னும் தெளிவாகவே விளங்க வேண்டும் என்பதற்காக மேலும் கூறுகிறோம்.

இன்று சிங்கள அரசு முழு வீச்சில் அனைத்துப் படை வலுவையும் பயன்படுத்தியும், உணவு, எரிபொருள் போன்ற தடைகளை நிறைவேற்றியும் இன்று தமிழர்களைத் தனிமைப்படுத்தி அழித்து வருகிறது. இந்த அளவிற்குத் துணியும் வலு சிங்கள அரசிற்கு இல்லை. ஆனால் "உண்மையான போராளிகளை எப்படியேனும் பழிவாங்கியே தீர வேண்டும். தமிழீழம் என்பது கனவோடு கனவாக வேண்டும். அதற்கு எந்தக் கேடு நடவடிக்கையும் எடுக்கலாம்" என்று அறிவுரை கூறித் தூண்டி விட்டதே இந்திய அரசுதான்.

ஒருவேளை செயவர்த்தனவே தமிழீழம் அமைவதற்கு ஒத்துக் கொண்டாலும், இங்குள்ள இந்

(முன்பக்கத் தொடர்ச்சி)

திய அரசும், அதன் எடுபிடிகளும், இந்தியப் பெயர்ப் பலகைப் பொதுவுடைமைக் கட்சிகளும் பாரதீய சனதா போன்ற ஆரிய வெறிக் கட்சிகளும் தமிழீழத்திற்கு எதிராகத்தான் குரலெழுப்பும். இந் நிலையில் வராது வந்த மாமணியாக(!) வந்து வாய்த்த நம் தமிழக முதல்வர்,எல்லாவற்றிற்கும் மேலாகத் தாய்மொழியால் மலையாளியாகவும், பிறந்த இடத்தால் சிங்களனாகவும், உணர்வால் இந்திய தேசிய ஒருமைப் பாட்டாளனாகவும், நடிப்பால் தமிழனாகவும் காட்டியே, ஈழத் தமிழின அழிவைச் சிறந்த முறையில் திட்டமிட்டு நடத்தி வரும் இந்திய அரசையும், அதன் தலைவர் இராசீவ் காந்தியையும் பாராட்டுவதற்காகத் தமிழகத்தில் உள்ள அனைத்துத் தமிழின எதிரிக் கட்சிகளைக் கூட்டி ஒரு மனதாகத் தீர்மானித்து அறிக்கை வெளிட்டுக் கொண்டிருக்கிறார்.

அந்த அறிக்கை வெளியாகும் போதே மீதமுள்ள தமிழ்ப் போராளிகளைச் சிறையில் அடைத்துத் தமிழ்மொழி, இன, நாட்டு உரிமைகளை அடைவு வைத்துத் தம்முடைய தமிழ்ப்பற்றை வெளியிட்டு இராசீவ் காந்திக்கு உடலாலும் உள்ளத்தாலும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார்.

இனி இவற்றுக் கெல்லாம் ஒட்டுமொத்தமாக நாம் கூறும் ஒரே தீர்வு தக்க பெரியோரைத் துணைக்கொண்டு அனைத்துத் தமிழின உரிமை மீட்பு இயக்கங்களும் "தமிழின ஒற்றுமை, தமிழின ஒருமைப்பாடு" என்ற மந்திரத்தின் கீழ் ஒரு கூட்டுத் தலைமை மூலமே போராட்டத்தை எடுத்துச் செல்வதே ஆகும்.

இல்லையெனில் தமிழினம் அறுப்பவனை நம்பும் ஆடுகளாகவும், அரிமாவிற்கு இரையான நான்கு எருதுகளாகவும் ஆகிச் சுவடு தெரியாமல் அழிக்கப்படும் என்பதை உணர்வோமா?

—"தமிழ்நோக்கன்".

ஓர் அறிவிப்பு!

'தமிழ்நிலம்' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

இந்திய மக்களை உறிஞ்சிக் கொழுக்கும் பண முதலைகள்!

செல்வக் குவிப்புத் தடைச்சட்டம் இந்தியாவில் நடைமுறையில் இருந்தும், இங்குள்ள பண முதலைகள் ஏழை மக்களைச் சுரண்டிக் கொழுத்து வருவதைக் கீழுள்ள புள்ளி விளத்தங்கள் காட்டுகின்றன. இந்திய அரசு நாட்டின் பொருளியல் வளர்ச்சி என்னும் பெயரால் இம் முதலாளிகளின் முதலீட்டுப் பெருக்கத்திற்குப் பலவகையிலும் துணைபோகிறது. இதை எவராலும் தட்டிக் கேட்க முடியவில்லை. (தொகை மதிப்பு கோடிக் கணக்கில் தரப்பட்டுள்ளது.)

பண முதலைகள்	1982	1983	1984
பிர்லா	2005	2831	3356
டாட்டா	2431	2672	3120
சிங்கானியா	620	674	858
மபத்லால்	611	695	787
தாபர்	465	572	699
ரிலையன் டெக்சுடைல்சு	512	563	673
அசோசியேட் சிமெண்ட்	473	571	654
மோடி	359	411	610
பங்கூர்	337	350	509
லார்சன் அண்டு டுப்ரோ	323	424	481

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவிலியத்துக்குள் அடக்கிக் கொண்டுள்ளதாகவே நமக்குப் படுகிறது. ஆசிரியர் முன்வைக்கும் கருத்துகள் அங்கதச் சிறப்பு மிக்கவை. இன்றைய அரசியல், குமுகியல் இழிவு நிலைகளை மிகச் சரியாகவே, சுட்டிக் காட்டுகின்றார். அவற்றுக்கு விவிலிய மேற்கோள்கள் பொருத்திக் காட்டப் பெறுகின்றன. செத்தவர் ஒப்போலை போடும் அரசியல், அரசுச் சார்பில் கொலைகள், கையூட்டு ஊழல்கள், உலக ஒன்றியப் பேரவையின் 'இயலாத' பயனில்லாத தன்மைகள் முதலியன நெஞ்சில் நிற்கும்படியாகக் கூறப்பெறுகின்றன.

நூலாசிரியரின் உரிமைப் பரப்பு இலக்கண உலகுக்குள் நுழைய இடந்தரவில்லை போலும்! இலக்கண மரபு வெறுமனே எண்ண ஒட்டத்துக்கும் வெளிப்பாட்டுக்கும் தடையானது, கட்டுப்படுத்துவது என்று எண்ணுவதாகத் தெரிகிறது. இது வருந்தத் தக்கது. உண்மை அறிவு விளக்கத்துக்குத் திருமுறை எவ்வளவுக்குப் பயன் தரும் என்று கருதுகின்றாரோ, அவ்வளவுக்கு உண்மை அறிவுணர்வின் வெளிப்பாட்டுக்கு இலக்கண மரபும் புதிய இலக்கண உத்திகளும் மொழிச் செப்பமும் தேவையே என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

—மருத்துவர்.

நூல் நலம்:

நூல்: **விளைப்பு உறவுகளும் குமுக உறவுகளும்.**

ஆசிரியர்: **பேயன்**
வெளியீடு: **தமிழக ஆய்வரண் (F. O. R. T.)**
48, டிசுபென்சரி சாலை, பெங்களூர்-560001
48 பக்கங்கள்: விலை உருபா: 3-00

பேரா. கேசவன் எழுதிய **மண்ணும் மனித உறவுகளும்** என்ற நூலின் போலித்தனங்களை விளக்கிக் காட்டுகிறது இந் நூல். தமிழகத்தில் தோன்றிய பொதுவுடைமைக் கட்சியின் பிற் போக்குத் தன்மைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கான அடிப்படை விளக்கங்கள் இதில் உள்ளன.

"தமிழ் இலக்கியங்களின் காலங்களை **வேண்டுமென்றே** பின்தள்ளும் முயற்சி, வரலாற்று அணுகு முறையில் வருந்தத் தக்க கொச்சைப் படுத்தல்கள், தமிழ்நாட்டில் கிழ்ச்சாதிக்காரர்கள் என்று தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்களின் பொருள்துறைச் சிக்கல்களை எடுத்துப் பேசுவதன் வழி குமுக ஒடுக்கு முறையை மறைத்து அவர் களைப் பிளவு படுத்தியுள்ள கொடுமை, அதன் உள்நோக்கங்கள், கழக இலக்கியச் சான்றுகளை மிக மேலோட்டமாகவே கையாளும் கரவான தன்மை, —இவை போலும் பல செய்திகளை எடுத்தியம்பிப் பார்ப்பனியத்தை அரணிட்டுக் காக்கும் ஒரு சார் பொதுவுடைமையரின் போங்கும் போலிமையும் புட்டுக் காட்டப் பெற்றுள்ளன இந் நூலில்.

வரண அமைப்புகளின் இயைபு, இடைவெளிகள், குமுகியலில் சமயத் தாக்கங்களின் விளைவு நிலைகள் பற்றியும் குறிக்கப் பெறுகின்றன. தமிழ் மக்களுக்கேற்ற பொதுவுடைமை வாழ்வு, அரசு அமைப்பதில் நாட்டமுள்ளோர் இன்றியமையாது அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் கொண்ட நூல் இது. அனைவரும் வாங்கிப் பயனடைக.

— மருத்துவர்.

நூல்: **சுதந்திரத்தின் பரப்பளவு.**

ஆசிரியர்: **செசர் செபநேசன்**
வெளியீடு, கிடைக்குமிடம்: **இராசு பதிப்பகம்,**
15. பி. கியோன் தெரு, நாகர் கோயில்-629001.
96 பக்கங்கள்: விலை உருபா. 7-90.

இந் நூலாசிரியர் தம் முற்போக்குச் சிந்தனைகளை விவிலியத் திருமுறையின் பின்னணியில் ஆராய்கின்றார். அவரது உரிமையின் பரப்பளவை

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம் பார்க்க)

எங்கள் கருத்துகள்!

0 தமிழ்நிலத்தின் புதுப்பொலிவு கண்டேன். மிக்க மகிழ்ச்சி. தொடரட்டும் நம் பணி.

—தமிழ்ச்சுடர் **சோ. மணிமுத்து,** பழனி

0 தமிழ்நிலம் இதழ் அமைப்பு மிகவும் அருமை இன்னும் 4 பக்கங்கள் கூட்டி இருக்கலாம் எனக் கருதுகின்றேன். —குழந்தை **ஈகவரசன்,** திருச்சி.

0 தமிழ்நிலம் வந்தது 12 பக்கங்களுடன் இதழ் கையடக்கமாக எடுப்புடன் இருக்கின்றது. புதிய இதழ்ப் பொறுப்பாளர்கள் அமைப்புக் குழு நன்று. இவர்களின் கூட்டு ஒத்துழைப்பில் இனித் தமிழ்நிலம் பல்வகைச் சிறப்புச் செய்திகளுடன் வெளிவரும் என்று நினைக்கலாம். அவர்களின் பணி சிறக்க எனது வாழ்த்துகள்.

ஒருகுறை! மொழி, இன, நிலம் மீட்பு குறித்த உணர்ச்சியும் எழுச்சியும் கொளுவிய உண்மைத் தெரிப்புரைகள் முந்திய இதழ்களில் உள்ளவை போல் இதில் இல்லை. உரைகள் எப்போதும் இயக்கமாக இருக்க வேண்டும். அந்த இயக்க மெனும் உயிர்ப்பை இதழில் பார்க்க முடியவில்லை. வெறும் கட்டுரையோ, அறிவுரையோ எந்த ஒரு நாட்டிலும் புரட்சியை உண்டாக்கியதில்லை. உணர்ச்சியாளர்கள் உருவாகி விட முடியாது. அவ்வுணர்ச்சியாளர்களிலிருந்துதான் புரட்சியாளர் உருவாக முடியும். இவ் விதழைப் படிப்போர் இஃதொரு தி. மு. க. சார்பிதழ் என்று உணர்வர். நமக்குத் தி. மு. க. வோ., அ. தி. மு க. வோ. தேவையில்லை. **இளஞ்சித்திரன்,** சென்னை-48.

0 "தமிழ் நிலம்" 81- இதழின் புதிய வடிவு நன்றாக உள்ளது. இவ்வளவிலேயே, பொருள் நிலைமையையும் விற்பனையையும் பொறுத்துப் பக்கங்களை அதிகரியுங்கள். எம் ஆதரவு உண்டு. 'தமிழ் நிலம்' வாழ, வளர என் உண்மையான வாழ்த்துகள். வழக்கறிஞர். ப. பத்மநாபன், சோமனூர்.

0 10-2-87 ஆம் நாளிட்ட "தமிழ் நிலம்" இதழ் பெற்றேன். படித்தேன். சேர, சோழ, பாண்டியன் காலத்தவனாகப் பிறவியெடுத்து அழுது தீர்த்தேன்!

அடுத்து ஆசிரியவுரை! அதனுள் அடங்கியுள்ள "யார் பெரியவர்?" அல்லது 'நம் தனித் தன்மை' இதில் எதையோ காண முடிகிறதே தவிர ஒற்றுமையைச் செய்யவேண்டியதை நினைவூட்டிச் செய்துள்ளதற்கு வழிகாட்டுதலையும் காண முடியவில்லை. பிரபாகரன் தலைமையை, மற்ற சூழலை மறந்து ஒன்றுபட அறிவுரை! தமிழகத்திலோ, ஓர் அறப்போரைத் தொடர்ந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தொடர்பவர்கள் மீது பழியுரை! இது ஏன்?

நீங்கள் கருதும் செயல்களை நீங்கள் நடத்தலாமே? அதைவிட்டு ஏதோ செய்து வருவதையும் இழித்துப் பழித்து ஏளனம் - ஏன்? காட்டிக் கொடுப்பதற்கொப்பான சொற்கள்?

மீ. சு. இளமுருகு பொற்செல்வி, குழித்தலை.

Scanned with CamScanner

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு நன்கொடை பட்டியல்!

	முன் மொத்தம்		10239-50
	திருவாளர்கள்.		
170.	கோ. சண்முகம்,	எண்ணூர்.	101-00
171.	சு. இராமதாசு,	,,	50-00
172.	பிரியா, நிறுவனம்,	,,	101-00
173.	ஆர். தர்மர்,	,,	51-00
174.	என். மனோகரன்,	,,	20-00
175.	க. பெரிய கருப்பன்,	,,	20-00
176.	செ. சகாதேவன்,	,,	50-00

(வரிசை எண்கள் : 19, 20, 34, 35, 170 முதல் 176 வரை தென்மொழி நா. இளமாறன் வழி வந்தவை.)

வேளச்சேரி வே. கோ. வெற்றிச் செல்வன் அவர்கள் வழி வரவு:

177.	கா். இராமமூர்த்தி,	வேளச்சேரி.	5-00
178.	வரதராசுலு,	,,	5-00
179.	சம்பந்தன்,	,,	5-00

திருச்சி, தென்னவன்கோ அவர்கள் வழி வந்த வரவு.

180.	எசு. செயராமன்,	திருச்சி.	5-00
181.	எம் வெற்றிச் செல்வன் (செயபாலன்),	,,	25-00
182.	ஐ. எசு. நாகராசன்,	,,	10-00
183.	வீ. நாராயணசாமி,	,,	10-00
184.	பேரா. நெடுஞ்செழியன்,	திருச்சி-1	50-00
185.	**மயிலாப்பூர் செல்வி: இசைமொழி, செல்வி. அங்கயற்கண்ணி இருவரும் தெருத்தண்டல் வழி திரட்டிய தொகை:**		28-00
186.	உண்டியல் வழி 22-12-86 அன்று உள்ளூர்த் தண்டலில் மா. மொழிலன், முருகவேள், குணத்தொகையன், குழந்தை ஈகவரசன், முருகேசன், கோபி, நெடியோன், செம்மல், செல்வி முதலியோர் திரட்டியது.		195-35
187.	மேற்படி வழி மேற்படியார்கள் 24-12-86 அன்று திரட்டிய தொகை		348-60
188.	,, 25-12-86 அன்று.		175-80
189.	வ. எண் 23-இல் பள்ளபட்டி புலவர். எழில்வாணன் வரவில் மேலும் கூடுதல்.		4-00
190.	சு. ப. திருமாறன், நெய்வேலி மேலும் வரவு.		2-90
	ஆக மொத்த வரவு.		11502-15

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 83 TN/MS (C) 657

நூல் அஞ்சல்

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

பெறுநர்:
திரு. / திருவாட்டி

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 2
அந்தந்தத் தேசிய இனத்திற்கு உகந்த பொதுவுடைமைதான் ஏற்கத் தக்கது.